**Minutes of the Public Hearing conducted for the M/s. P.Kanthavelu Rough Stone and Gravel Quarry, S.F.No. 28/1, 29/1, 29/2, 30/1A1, 30/1A2, 30/1B, 30/1C1, 30/1C2, 30/2A, 30/2B, 30/3D, 31/1A, 31/1B, 31/2A, 47/10C, 48/4A, 48/4B & 48/4C, of Chettipillayarnatham Village, Thirumangalam Taluk, Madurai District held on 22/08/2023 at 11.00AM at M/s. Vaigai Mahal, No. 15/1-1, Virudhunagar Road, Melakottai Vilakku, Thirumangalam Taluk, Madurai District.**

**Present:**

**Thiruvalargal:**

| | | | |
|---|---|---|---|
| 1 | M. Shanthi | : | Revenue Divisional Officer,<br>Thirumangalam,<br>Madurai District. |
| 2 | Dr.R.Gunasekaran | : | District Environmental Engineer,<br>TamilNadu Pollution Control Board,<br>Madurai District, |
| 3 | G.Usha Rani | : | Assistant Engineer,<br>TamilNadu Pollution Control Board,<br>Madurai District. |
| 4 | S. Jesus Sivasankar | : | Assistant Engineer,<br>TamilNadu Pollution Control Board,<br>Madurai District, |

5 Project Proponent and public : As per Attendance Register
(Copy of Register is enclosed)

**District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Madurai**

The DEE cordially welcomed the Revenue Divisional Officer, Thirumangalam, under who Preside over the public hearing to be conducted.

He also welcomed the Thasildar, Revenue officials, Police officials, Press people, social workers, proprietor of M/s.P.Kanthavelu Rough Stone and Gravel Quarry, Project consultant, workers and public who have participated in the public hearing meeting.

He explained that the press release for this public hearing was issued in both Thinathanathi and the New Indian Express on 15.07.2023.

As per EIA Notification, 2006, as amended on 2009, Public Hearing has to be conducted before issuing Environmental Clearance, It has been proposed to establish a stone quarry M/s. P.Kanthavelu Rough Stone and Gravel Quarry, S.F.No.28/1, 29/1, 29/2, 30/1A1, 30/1A2, 30/1B, 30/1C1, 30/1C2, 30/2A, 30/2B, 30/3D, 31/1A, 31/1B, 31/2A, 47/10C, 48/4A, 48/4B & 48/4C, 4.98.0 hectare of Chettipillayarnatham Village, Thirumangalam Taluk, Madurai District. In this regard public hearing is being conducted today to get the public opinion on this proposed activity.

After the project consultant explains about the proposed project, the public can share their views about the project. The same will be recorded and with

the approval of Revenue Divisional Officer, it will be sent to the State Environment Impact Assessment Authority (SEIAA), Chennai.

The public were requested to tell their name and village name before sharing their views pertaining only to the project. Public can share their views both verbally and in written format.

He welcomed Revenue Divisional Officer, Thirumangalam to preside over the meeting.

**Revenue Divisional Officer, Thirumangalam**

She greeted everyone and requested the public to tell their opinion about the proposed project.

**Technical presentation by Environmental Consultant**

The Environmental Consultant of M/s. P.Kandavelu Rough Stone and Gravel Quarry briefly explained the salient aspects of the proposed project.

**District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Madurai**

He stated that the public may share their views on the project.

**1.Thiru. Nethaji, Usilampatti, Tamizhaga Vivasaya Pathukappu Sangam, State Secretary, Madurai.**

He stated that, It's what we've already recorded. They say this project cost is 1 crore. It's the same as estimate for 1 km stretch of panchayat road. It costs crores to build roads. We don't have drinking water. The quarries from Western Ghats to Kanyakumati to Coimbatore, Pollachi are not useful for Tamil Nadu. Most of it goes to Kerala. This is going to cause huge earthquake to Tamil Nadu.

We're not going to have water to drink. We're buying water for Rs 10 per can or Rs 7 per pot. We used to drink spring water and channel water. Today groundwater is getting depleted. We won't have water.

Like previous public hearing, here too 40 documents aren't there. In report of analysis, inspection date is not mentioned. If tomato sells for Rs 200, Government adviseds it to be sold for Rs. 60. What will we do for food if agriculture is destroyed. Is it enough, if we have only money? Society is marching towards destruction. If we can't protect Earth, soil, land, water, we cannot protect society. Social destruction doesn't mean what work we do, we and our children being good. What are we leaving for future generation other than waste? Wherever we see, there is plastic. This causes global warming, which has brought earth near destruction.

Arctic ocean and snowy regions are melting. In such circumstances is it enough for just a few to have good life? This society should be good. This stone quarry should be prohibited. This is affecting agricultural land. Water is affected. If water table goes from 100 feet to 800 feet we will have to drink only acid. We don't want that to happen.

This is a water scarcity area. Here, wild animals and deer are present. We're protesting against the destruction wild pigs caused by. We've given petition to District Collector. If a single deer dies in this survey number, can Revenue Department and District Administration promise that no action will be taken. No is the answer. There is deer in that survey number. We're seeing them. How can you say that there is no wild animals? If that area is blasted, where will that wild animal go? Destruction only will come. Already, it has come out of hills and is in forest. From forest where else can we send wild animals? Due to water scarcity, all

organism from snake to birds will close to destruction. Hence stone quarry should be prohibited.

**2.Thiru. Selvaraj, Kampur, Melur**

He stated that I am sharing my views on Kandavel Quarry. There have been violations in survey numbers 28/1, 29/1, 29/2, 30/1A1, 30/1A2, 30/1B, 30/1C1, 30/1C2, 30/2A, 30/2B, 30/3D, 31/1A, 31/1B, 31/2A, 47/10C, 48/4A, 48/4B & 48/4C. Especially the Minor Minerals Rule 1959, Section 36 (1), which states that there should not be any approved habitations, Plots, approved by DTCP, temples Government Row houses, Green houses within 300 m distance of the quarry. In the eastern direction quarry survey numbers 31A, 1A, 1B at a distance of 150m in survey number 32 there is habitation.

Since there are habitations within a distance of 300m from boundary of the quarry, permission should not be given to it. This is clear in FMB and RSR sketches. It is clear from the Minor Mineral Rule1959, Section 36 (1) that there shouldn't be any approved habitations from the boundary of 300 m distance of the quarry.

40 documents have not been attached. Already I have said about the documents. Let me say about the left out documents alone:

The 40 documents that are not available online:

| | |
|---|---|
| 1. | ToR letter issued by Member Secretary of SEIAA to the stone quarry |
| 2. | Compliance of conditions with respect to ToR letter issued by Member Secretary of SEIAA to the stone quarry |

| | |
|---|---|
| 3. | Certified report of VAO stating non existence of houses/building and approved plots within a distance of 300m, lake, low/high transmission electric lines, crematoriums roads, Railway tracks and Petroleum Pipelines within a distance of 50m, Crematorium, roads, railway tracks and petroleum pipelines, pathways and village roads within a 10m distance, Archaeological or heritage monuments within a distance of 500m, Protected reserve forests within a radius of 1km, water pumping stations and edge wells, drinking water schemes, bridges executed by local bodies or TWAD within a distance of 500m distance from the proposed site of quarry |
| 4. | Field map and registered records of quarrying site and Adangal details obtained from VAO |
| 5. | Certificate of project consultant |
| 6. | Agreement letter with company who supplying explosives. |
| 7. | Letter of AD (Mines) regarding quarries within a radius of 500m |
| 8. | Proceedings of the District Collector regarding establishment of quarry |
| 9. | Quarry proponents affidavit/ undertaking. |
| 10. | Photos showing the site of quarry |
| 11. | FMB village map, Adangal Showing 300m to 500m distance with VAO's signature, like 40 documents should be attached. |

Since 40 documents have not been attached, permission should not be given to the quarry. Since, documents had not been uploaded in TNPCB website,

Thirupur District Collector had cancelled a public hearing meeting in December 2022 for Madathukulam Maiyavadi stone quarry. Last year TNPCB, Coimbatore-South conducted public hearing meeting for Kachampalayam, Arasampalayam quarries namely Manikandan and Paramasivan quarries with 1100 page report that had been uploaded online. Since 40 documents were not attached the public hearing meeting on 16.06.2022 for Sivan Malai Granite quarry, Kangeyam was cancelled. Hence let public hearing meeting be conducted democratically after 40 documents have been uploaded in TNPCB website. If it cannot be uploaded let the public hearing meeting be cancelled. I shall add a few more points.

We talked about employment. Now every village panchayat gets grants from both State and Central Governments. We agree what women talked here. People in towns can survive doing some kind of job. But we believe village people are secluded. We have been working for the betterment of villages for the past 10 years. This quarry is also nearby one such village. This quarry is a hindrance for the betterment of the village. Hence we are participating in this public hearing meeting and sharing our views.

Nowadays, we have Grama Sabas. These public hearing meetings are debated in grama sabas. This is because only local people know what is needed for their locality. We have to know what decision Grama Saba takes.

Regarding employment, Central Government has 100 day employment schemes for all families. Salary is RS. 300. Each family will earn Rs 30,000 per year. Will quarry give this much salary? It's enough we utilise the 100 day employment scheme properly. We cannot accept this point of view.

There is a website called Flying Soft. It shows the earnings and spendings of each village panchayat. If grants are properly utilized, people wouldn't speak like this. For the past 5 years approximately Rs. 5 crore is being spent in every panchayat. If it had been spent properly, these people wouldn't speak like this for money, risking their children's futures.

Government is exploiting people's ignorance and poverty and risking the wellbeing of future generations. This is unforgivable mistake. Today whom do we complaint about? It's our previous generations. We're suffering like this only because of them. But in future our children also will talk about us only like this. Just because our father and mother have done mistakes like this, just for the sake of single salary we're putting whole villages at risk. Future generations will complaint against us for supporting this. We live only once.

This Earth is common for all birds, insects, snakes to all living beings. Rocks are habitats for these living beings. It is a source of Ground water. Having this in mind, we have to find alternative for stone quarries in future. Otherwise it should be run within government norms. Permission should not be given to quarries in spite of violations.

**3.Thiru. Meeran Mydeen, Kallikudi, Vivasaya Padukappu Sangam**

He stated that, they say few job opportunities will be created because of quarry. But agriculture will definitely be affected for 5 km radius. You can conduct research using any agricultural researcher. When dust falls on soil, sunlight won't reach root of plants. When dust settles on plants, yield is affected. Agriculture is long term. But you are doing like this only for the benefit of a few. Let them do

quarries away from agricultural lands. The whole agricultural land is affected. This affects yield. Soil will be polluted. Cultivation of grains will be affected.

**4.Thiru. Ponraj, Rayapalayam,**

He state that I have studied MSW. We welcome this quarry. But we want better roads. Before this small vehicles used the roads. Nowadays big vehicles moving. It will be good if road is widened. Only 32 students study in our Village school. If better education is given to them, it will be good. If school is improved and English medium is introduced it will be good. Drinking water facilities should be provided. Especially road should be widened.

**5.Thiru. Mani, Chettipillaiyarnatham**

He stated that I've been working in quarries for the past 15 years. If this is not there is no other way. There are only 15 houses in our village. We have to survive only based on that. We don't have any lands. If we work we will have food. Depending on this 100 people are working. We want this job. Permission has to be given. We can live only based on this.

**6.Thiru. Alaguraj, Alampatti**

He stated that I've been working for the past 10 years in stone quarries. From beginning 25 families have been depending only on this. We want this quarry.

**7.Thiru. Kundumani, Keelakottai**

He stated that I'm a farmer. First forest officials have to prevent wild animals from entering agricultural land. No Plantation is able to do in

lands. Wild animals like deer destroy our crops. We incur loss because of this. Only because of this we have to go to stone quarry work. Everyone here goes to stone quarry work. Agriculture has been already affected. Officials have to prevent wild animals from destroying our crops.

**District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Madurai**

All your views about M/s. P.Kanthavelu Rough Stone and Gravel Quarry have been recorded. He thanked everyone to peacefully concluding this public hearing meeting.

The meeting came to an end.

District Environmental Engineer,
Tamilnadu Pollution Control Board,
Madurai

25.8.2022

Revenue Divisional Officer
Thirumangalam
Madurai

**Enclosures:**

1. Copy of press release (Public Notice Published in Tamil & English) for notifying the public hearing meeting.
2. Copy of attendance sheet of the public hearing, (Total pages13 & 109 persons)
3. Copy of Audio & Video (DVD - Disc) of the public hearing proceedings.
4. Copy of petition received from the public.

**மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், செட்டிபிள்ளையார்நத்தம் கிராமம், புலஎண். 28/1, 29/1, 29/2, 30/1A1, 30/1A2, 30/1B, 30/1C1, 30/1C2, 30/2A, 30/2B, 30/3D, 31/1A, 31/1B, 31/2A, 47/10C, 48/4A, 48/4B & 48/4C, தி/ள்.பி.கந்தவேலு சாதாரண கற்கள் மற்றும் கிராவல் குவாரி திட்ட பணிகளுக்கு பொதுமக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் 22/08/2023 அன்று காலை 11.00 மணியளவில் தி/ள்.வைகை மஹால், எண் 15/1-1 விருதுநகர் ரோடு, மேலக்கோட்டை விலக்கு, திருமங்கலம் வட்டம், மதுரை மாவட்டத்தில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கை விபரங்கள்.**

**பங்கேற்றோர்**

**திருவாளர்கள்**

| | | |
|---|---|---|
| 1. | மு. சாந்தி | வருவாய் கோட்டாட்சியர்<br>திருமங்கலம்,<br>மதுரை மாவட்டம் |
| 2. | முனைவர்.இரா. குணசேகரன் | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>மதுரை மாவட்டம். |
| 3. | திருமதி.கோ. உஷா ராணி | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>மதுரை மாவட்டம். |
| 4. | திரு.ச.ஜீசஸ் சிவசங்கர் | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>மதுரை மாவட்டம். |
| 5. | தொழிற்சாலை பிரதிநிதிகள் | வருகை பதிவேட்டில் உள்ளபடி. |

மற்றும் பொதுமக்கள் (வருகை பதிவேட்டின் நகல் இணைக்கப்பட்டுள்ளது)

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், மதுரை**

பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்திற்குத் தலைமை தாங்கி நடத்திட வருகை புரிந்திருக்கும் மதிப்பிற்குரிய வருவாய் கோட்டாட்சியர், திருமங்கலம் அவர்களுக்கு தன் முதற்கண் வணக்கத்தை தெரிவித்துக் கொண்டார்.

பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்திற்கு கலந்து கொள்ள வருகை தந்திருக்கும் வட்டாட்சியர், வருவாய் துறை அதிகாரிகள், காவல் துறை அதிகாரிகள், பத்திரிக்கை நண்பர்கள், சமூக ஆர்வலர்கள், தி/ள்.பி.சண்முகம் சாதாரண கற்கள் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்தின் உரிமையாளர், பிரதிநிதிகள், பணியாளர்கள் மற்றும் பொது மக்களையும் வரவேற்றார்.

இத்திட்டத்திற்கான செய்தி வெளியீடு 15.07.2023 அன்று தினத்தந்தி மற்றும் தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழ்களில் வெளியிடப்பட்டது.

மத்திய சுற்றுச்சூழல் வனத்துறை மற்றும் பருவநிலை மாறுபாடு அமைச்சகம், புது தில்லி, 14.09.2006 அன்று வெளியிட்ட மற்றும் 2009 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டின்படி சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதற்கு முன் பொதுமக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் நடைபெற வேண்டியது அவசியமானது என்பதால் தி/ள். பி. கந்தவேலு 4.98.0 ஹெக்டேர்ஸ் நிலப்பரப்பில் புலஎண். 28/1, 29/1, 29/2, 30/1A1, 30/1A2, 30/1B, 30/1C1, 30/1C2, 30/2A, 30/2B, 30/3D, 31/1A, 31/1B, 31/2A, 47/10C, 48/4A,

**48/4B & 48/4C,** செட்டிபிள்ளையார்நத்தம் கிராமம், திருமங்கலம் வட்டம், மதுரை மாவட்டத்தில் நிறுவிடவும், இயக்கிடவும் உத்தேசித்துள்ளது. சாதாரண கற்கள் எடுப்பதற்கு பொதுமக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் இன்று நடைபெறவுள்ளது என கூறினார்.

நிறுவனத்தின் பிரதிநிதிகள் இந்த உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டம் பற்றி விவரித்த பின் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை தெரிவிக்கலாம். தெரிவிக்கும் கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் ஒப்புதலுடன் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு குழுமம், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொண்டார்.

பொதுமக்கள் தங்களது பெயர் மற்றும் ஊர் பெயர் சொல்லி இத்திட்டம் சம்பந்தப்பட்ட கருத்துக்களை மட்டும் பதிவு செய்யுமாறு அன்புடன் கேட்டுக் கொண்டார். பொதுமக்கள் தங்களது கருத்துக்களை வாய் மொழியாகவோ அல்லது எழுத்து வடிவிலோ தெரியப்படுத்தலாம் என கூறினார்.

மதிப்பிற்குரிய வருவாய் கோட்டாட்சியர், திருமங்கலம் அவர்கள் இக்கூட்டத்திற்கு தலைமை தாங்கி நடத்தித் தரும்படி அன்புடன் கேட்டுக்கொண்டார்.

**வருவாய் கோட்டாட்சியர், திருமங்கலம்**

அனைவருக்கும் வணக்கம். அடுத்தபடியாக நடக்கவிருக்கம் கூட்டத்திற்காக பொது மக்கள் தங்களது கருத்துக்களை தெரிவிக்கலாம் என கூறினார்.

**தொழில் நுட்ப விளக்கம், சுற்றுச்சூழல் ஆலோசகர்**

சுற்றுச்சூழல் ஆலோசகர் தி/ள்.பி. கந்தவேலு சாதாரண கற்கள் மற்றும் கிராவல் குவாரி திட்டங்கள் தொடர்பாக விளக்கவுரையை எடுத்துரைத்தார்.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், மதுரை**

பொது மக்கள் தங்களது கருத்துகளை தெரிவிக்குமாறு கூறினார்.

**1.திரு. நேதாஜி, உசிலம்பட்டி, தமிழக விவசாய பாதுகாப்பு சங்கம், மாநில துணை பொது செயலாளர், மதுரை**

ஏற்கனவே நாங்கள் பதிவு செய்ததுதான். இந்த திட்டத்தின் மதிப்பு 1 கோடி என்று கூறுகிறார்கள். இன்றைக்கு நாம் ரோட்டிற்கு 1 கிலோமீட்டர்க்கு எஸ்டிமேட் பஞ்சாயத்திடம் வாங்கி கொடுத்தால் நன்றாக இருக்கும். அந்த வருவாயே அவ்வளவுதான். ரோடு போடுவதற்கு பல கோடி ரூபாய் செலவு செய்கிறார்கள். குடிக்க தண்ணீர் இல்லை. இன்று கல் குவாரிகள் மேற்கு தொடர்ச்சி மலை முதல் கன்னியாகுமரி வரை கோயம்புத்தூர், பொள்ளாச்சி வரை உள்ள அத்தனை கல்குவாரிகள் இந்த தமிழ்நாட்டிற்கு பயன்படுகிற குவாரிகள் இல்லை. இவை அனைத்தும் கேரளாவிற்கு அதிகமான கல் செல்கிறது. இதனால் மிகப்பெரிய பூகம்பத்தை தமிழ்நாடு சந்திக்க போகிறது. குடிக்க தண்ணீர் இல்லாமல் போகபோகிறது. நாம் இன்று கேன் 10ரூபாய், குடம் 7 ரூபாய்க்கும் லாரிகளில் தண்ணீர் வாங்குகிறோம். நாங்கள் ஊற்று தண்ணீர், ஓடை தண்ணீரை குடித்தவர்கள். இன்று நிலத்தடிநீர் குறைந்து தண்ணீர் இல்லாமல் போகப் போகிறோம்.

ஏற்கனவே நடந்த கருத்து கேட்பு கூட்டத்தில் கூறியபடி 40 ஆவணங்கள் இல்லை. ஆய்வு செய்தவர்கள் என்ன தேதியில் ஆய்வு செய்தார்கள். ஒரு தடவை தக்காளிக்கு 200 ரூபாய் விலை விற்றதை அரசாங்கம் 60 ரூபாய்க்கு கொடுக்க வேண்டும் என்று கூறுகிறது. விவசாயம் அழிந்து போனால் சாப்பாட்டிற்கு என்ன செய்வது? காசு இருந்தால் போதுமா? அழிவை நோக்கி செல்கிறது சமூகம். பூமியும், மண்ணும், நிலமும், நீரும் பாதுகாக்கப்படவில்லை என்று சொன்னால் இந்த சமூகத்தை அழிவிலிருந்து காப்பாற்ற முடியாது. சமூகத்தை அழிவு என்பது இன்று நாம் வேலை செய்வது, நாம் நன்றாக இருப்பது, நம் பிள்ளைகள் நன்றாக இருப்பது இல்லை. நம் சந்ததிக்கு நாம் என்ன விட்டு சென்றோம்? குப்பையை தவிர ஒன்றுமில்லை, எங்கு பார்த்தாலும் பிளாஸ்டிக் கழிவுகள், இப்படிப்பட்ட காரணத்தால் பூமி வெப்பமயமாதல், பூமி அழியக்கூடிய சூழல் உருவாகிறது.

ஆர்டிக் கடல், பனிப் பிரதேசமே உருகிக் கொண்டுள்ளது. அப்படி ஒரு சூழலில் நம்ம 4 பேர் நன்றாக இருந்தால் போதுமா. இந்த சமூகம் நன்றாக இருக்க வேண்டும். இந்த கல் குவாரியை தடை செய்ய வேண்டும். இதனால் விவசாய நிலம் பாதிக்கப்படுகிறது. நீர் பாதிக்கப்படுகிறது. தண்ணீர் 100 அடியிலிருந்து 800 அடிக்கு சென்றால் ஆசிட்டை தான் குடிக்க வேண்டும். அப்படி ஒரு நிலை வேண்டாம் என்பதற்காகதான்.

இந்த பகுதி வானம் பார்த்த பூமி. இங்கு வனவிலங்குகள், மான் அதிகமாக நடமாடும். பன்றிகள் உள்ளது. காட்டு பன்றிகளுக்காக போராட்டம் நடத்தி கொண்டிருக்கிறோம். மாவட்ட ஆட்சித்தலைவரிடம் மனு கொடுத்துள்ளோம். நாளை இந்த சர்வே எண்ணில் 1 மான் இறந்துவிட்டால், வருவாய் துறையும், மாவட்ட நிர்வாகமும் எந்த நடவடிக்கையும் எடுக்காது என்று ஒப்புதல் கொடுக்க முடியுமா? இல்லை என்பது தான் பதில், அந்த சர்வே எண்ணில் மான் உள்ளது. நாங்கள் பார்த்துக் கொண்டுதான்

இருக்கிறோம். வன விலங்கு இல்லை என்று எப்படி சொல்ல முடியும்? அங்கு வெடி வைத்தால் வன விலங்கு எங்கு செல்லும், அழிவுதான் வரும் ஏற்கனவே மலையை விட்டு வந்து காட்டுக்குள் உள்ளது. காட்டை விட்டு வனவிலங்குகளை எங்கு கொண்டு செல்லப்போகிறோம். குடிக்க தண்ணீர் இல்லாமல், வனவிலங்குகளையும் அழித்து விட்டால் ஒட்டு மொத்த பல்லுயிர் பெருக்கம் பாம்பு முதல் பறவைகள் வரை தண்ணீர் இல்லாமல் அழியும் சூழ்நிலை உருவாகும். எனவே கல்குவாரியை தடை செய்ய வேண்டும்.

2.திரு. செல்வராஜ், கம்பூர், மேலூர்

கந்தவேல் கல் குவாரிக்கான என் கருத்தை பதிவு செய்து கொள்கிறேன். புல எண். 28/1, 29/1, 29/2, 30/1A1, 30/1A2, 30/1B, 30/1C1, 30/1C2, 30/2A, 30/2B, 30/3D, 31/1A, 31/1B, 31/2A, 47/10C, 48/4A, 48/4B & 48/4Cகளில் விதிமுறைகள் மீறல் உள்ளது. குறிப்பாக, சிறு கனிம விதிகள் 1959, பிரிவு 36 (1)ன் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட வீடுகள், ஊராட்சி மற்றும் DTCPயால் அங்கீகரிக்கப்பட்ட வீட்டுமனைகள், ஊர் நத்தம், கோவில் போன்ற நிரந்தர கட்டுமானங்கள், அரசு தொகுப்பு வீடுகள், பசுமை வீடுகள் இருந்தால் 300 மீ இடைவெளி விட்டு மட்டுமே குவாரிப்பணி செய்யப்படவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த கல் குவாரி அமைய உள்ள இடத்திற்கு அருகே புல எண். 31A, 1A, 1B, கிழக்குப்பகுதியில் சுமார் 150ல் புல எண் 32ல் வீட்டுமனை மற்றும் வீடு உள்ளது.

இந்த கல்குவாரியின், வெளிமுனைப் பகுதியிலிருந்து சுமார் 300 மீ தூரத்தில் வீடுகள் மற்றும் வீட்டு மனைகள் உள்ளதால் அனுமதி தரக்கூடாது.FMB மற்றும் RSRல் தெளிவாக காட்டப்பட்டுள்ளது.

சிறு கனிம விதிகள் 1959 பிரிவு 36 (1)ல் வீடு மற்றும் வீட்டு மனைகள் நிரந்தர கட்டுமான குவாரியின் வெளிமுனை பகுதியிலிருந்து 300மீ இடைவெளி விட்டுதான் குவாரி பணிகள் நடைபெற வேண்டும் என்ற அரசு விதி தெளிவாக உள்ளது.

40 வகையான ஆவணங்கள் இணைக்கப்படவில்லை. ஏற்கனவே ஆவணங்களை பற்றி கூறியுள்ளேன். விடுப்பட்டுள்ள ஆவணங்களை பற்றி கூறுகிறேன்

1. கல் குவாரிக்கு, மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டுக் குழுமம் உறுப்பினர் செயலர் கொடுத்த Terms of Reference (TOR) கடிதம்.
2. கல் குவாரிக்கு, மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டுக் குழுமம் உறுப்பினர் செயலர் கொடுத்த Terms of Reference (TOR) கடித அடிப்படையில் நிறைவேற்றப்பட்ட ஒப்பீட்டு பட்டியல்.
3. அரசு விதிகளின் (Criteria) அடிப்படையில், கல்குவாரி அமையும் இடத்திலிருந்து 300 மீட்டர் தூரத்திற்குள் வீடுகள்–கட்டிடங்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வீட்டு மனைகள், 50 மீட்டர் தூரத்திற்குள் ஓடை, உயர்/தாழ் மின்சாரம் செல்லும் கம்பிகள், மயானம், சாலைகள், இரயில்வே இருப்புப்பாதை மற்றும் பெட்ரோலிய லைன்கள், 10 மீட்டர் தூரத்திற்குள் பாதை மற்றும் கிராம சாலைகள், 500 மீட்டர் தூரத்திற்குள் தொல்லியல் மற்றும் வரலாற்றுச் சின்னங்கள், ஒரு கிலோமீட்டர் சுற்றளவிற்குள் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதி (Reserve Forest), 500 மீட்டர் தூரத்திற்குள் உள்ளாட்சி அமைப்புகள் அல்லது குடிநீர் வடிகால் வாரியம் மூலம் செயல்படுத்தப்படும் நீரேற்றும் அமைப்புகள் மற்றும் வடிமுனை கிணறு, குடிநீர் திட்டங்கள், பாலம் ஆகியவை இல்லை என உறுதிப்படுத்தி கூறும் கிராம நிர்வாக

அலுவலரின் சான்று அறிக்கை

4. குவாரி அமையும் இடம் தொடர்பான புல வரைபடம், பதிவேடு விபரங்கள் மற்றும் கிராம நிர்வாக அலுவலரிடம் பெற்ற அடங்கல் விபரங்கள்
5. திட்டத் தயாரிப்பாளரின் சான்றிதழ்
6. வெடிமருந்து சப்ளை செய்யும் நிறுவனங்களோடு போட்டுள்ள ஒப்பந்த கடிதம்
7. 500 மீட்டர் சுற்றளவில் உள்ள குவாரிகள் பற்றிய உதவி இயக்குனர் (கனிமம்) கடிதம்
8. குவாரி அமைப்பது தொடர்பாக மாவட்ட ஆட்சித்தலைவரின் குறிப்பாணை
9. குவாரி உரிமையாளரின் சத்திய பிரமாண வாக்குமூலம்
10. குவாரியின் இருப்பிடத்தை காட்டும் படங்கள்
11. புல வரைபடம், கிராம வரைபடம், அடங்கல் 300மீட்டர் முதல் 500 மீட்டர் தூரத்திற்கான வரைபடத்தில் கிராம நிர்வாகியின் கையொப்பம் ஆகிய நாற்பது வகையான ஆவணங்கள் இணைக்கப்படவேண்டும்

40 வகையான ஆவணங்கள் இணைக்கப்படாததால் குவாரிக்கு அனுமதி தரக்கூடாது. மாசு கட்டுபாடு வாரியத்தின் இணையதளத்தில் இணைப்புகள் ஏற்றப்படாத காரணத்தால் ஏற்கனவே புகார் கொடுத்து திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் டிசம்பர் 2022 அன்று திருப்பூர் தெற்கு மாசு கட்டுப்பாடு வாரியம் மடத்துகுளம் மையவாடி கல்குவாரி கருத்து கேட்பு கூட்டத்தை ரத்து செய்து இருக்கிறார். கோவை – தெற்கு மாசு கட்டுப்பாடு வாரியம் சார்பில் கடந்த ஆண்டு நடந்த கச்சாபாளையம், அரசம்பாளையம்,

மணிகண்டன் மற்றும் பரமசிவன் கல்குவாரிக்கு 1100 பக்கம் இணைப்புகள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்து நடத்தினர். 40 வகையான ஆவணங்கள் இல்லாததால் மாவட்ட ஆட்சித்தலைவரிடம் மனு கொடுத்தும் பதிவேற்றம் செய்யதாத்தாலும் கடந்த வருடம் 16.06.2022 அன்று மக்கள் ஒன்றுதிரண்டு எதிர்த்ததால் காங்கேயம் வட்டம், சிவன் மலை கிராணைட் குவாரி கருத்து கேட்பு கூட்டம் நடத்த முடியாமல் தொடக்கத்திலேயே நின்று போனது. எனவே 40 வகையான ஆவணங்களை முழுமையாக மாசு கட்டுப்பாடு வாரியம் இணையதளத்தில் பதிவேற்றி அதன்பின் ஜனநாயக பூர்வமாக கருத்துக் கேட்பு கூட்டத்தை நடத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. பதிவேற்றம் செய்ய முடியவில்லை எனில் கருத்து கேட்பு கூட்டத்தை ரத்து செய்யும்படி கேட்டு கொள்கிறோம். இது தவிர ஒரு சில கருத்துக்கள்.

வேலைவாய்ப்பை பற்றி பேசினோம். இப்பொழுது ஒரு ஊராட்சிக்கு மத்திய அரசு நிதி மற்றும் மாநில அரசு நிதி வருகிறது. இங்கு பெண்கள் பேசியதை நாங்களும் ஏற்றுக் கொள்கிறோம். நகரத்தில் உள்ளவர்கள் ஏதாவது வேலை செய்து பிழைத்துக் கொள்கிறார்கள். ஆனால் கிராமத்தில் உள்ள மக்கள் தனித்து விடப்பட்டதாக நாங்கள் நினைக்கிறோம். நாங்களும் கடந்த 10 வருடங்களாக கிராம முன்னேற்றத்திற்காக வேலை செய்து கொண்டு தான் இருக்கிறோம். அதில் ஒரு சிறு பகுதியாக இந்த கிராமங்களை ஒட்டிதான் இந்த கல்குவாரிகள் இயங்குகிறது. கிராமங்களின் வளர்ச்சியில் இந்த கல்குவாரிகளின் பங்கு ஒரு தடையாக உள்ளது. எனவே, இந்த கருத்து கேட்பு கூட்டத்தில் கலந்து கொண்டு எங்கள் கருத்தை பதிவு செய்கிறோம்.

தற்பொழுது, கிராம சபை என்ற அமைப்பு உள்ளது. இந்த கருத்து கேட்பு கூட்டத்தைப் பற்றி கிராம சபையில் விவாதிக்கப்படுகிறது.

ஏனென்றால், அந்த பகுதியில் என்ன வேண்டும் என்று அப்பகுதி மக்களுக்கு தான் தெரியும், அந்த கிராம சபை என்ன முடிவு எடுக்கிறது என்று அறிய வேண்டும்.

வேலை வாய்ப்பில் மத்திய அரசு 100 நாள் திட்டம் என்று ஒவ்வொரு குடும்பத்திற்கும் 100 நாள் வேலை கொடுக்கிறார்கள். சம்பளம் 300 ரூபாய், ஒரு குடும்பத்திற்கு வருடத்திற்கு 30,000 ரூபாய் வருமானம் கிடைக்கும். குவாரியில் இவ்வளவு சம்பளம் கிடைக்குமா?. 100 நாள் திட்டத்தை முறையாக பயன்படுத்தினாலே போதும். இந்த கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாது.

Flying soft என்ற வெப்சைட் உள்ளது. ஒவ்வொரு பஞ்சாயத்திலும் எவ்வளவு செலவு செய்துள்ளார்கள். எவ்வளவு வருமானம் வந்துள்ளது என உள்ளது. இந்த நிதியை சரியாக செலவு செய்தால் கூட இந்த மக்கள் இப்படி பேசியிருக்கமாட்டார்கள். கிட்டத்தட்ட 5 வருடமாக சராசரியாக 5 கோடி ரூபாய் ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் செலவு செய்கிறார்கள். இத்தனை வருடமாக இந்த கருத்து கேட்பு கூட்டத்தில் மக்கள் என் உயிரே போனாலும் அவர்கள் குழந்தைகளின் எதிர்காலத்தை பணயம் வைத்து இந்த மாதிரியான கருத்துக்களை தெரிவித்திருக்கமாட்டார்கள்.

இந்த மக்களின் ஏழ்மையையும், அறியாமையையும் இந்த அரசாங்கம் பயன்படுத்தி எதிர்காலத் தலைமுறையின் உயிரை பணயம் வைக்கிறது. இது மன்னிக்க முடியாத குற்றமாகும். இன்று யாரை குறை சொல்லுகிறோம்?. நம் முன்னோர்களை தான். அவர்களால் தான் நாம் இவ்வளவு கஷ்டப்படுகிறோம். ஆனால் நாளை நம்மை நம் பிள்ளைகளும் இப்படித்தான் கூறுவார்கள். நம் அப்பா, அம்மா இப்படி தவறு செய்து விட்டார்கள் என்று. இன்று கிடைக்கும் ஒரு வருமானத்திற்காக, நாளை ஒரு

ஊரையே காலி செய்யும் நிலைமை வரும். இப்படி ஒரு விஷயத்திற்கு ஆதரவு கொடுத்துவிட்டார்களே என்று வருங்காலத்தில் நம்மை பழிப்பார்கள். நாம் வாழ்வது ஒரே ஒரு முறை தான்.

இந்த பூமி அனைவருக்கும் சொந்தம் , பறவைகள், பூச்சிகள், பாம்புகள் என எல்லா விலங்குகளுக்கும் சொந்தம், பாறைகள் இந்த பல்லுயிர்களுக்கு வாழ்விடமாக உள்ளது. நிலத்தடி நீர் மட்டத்திற்கும் ஆதாரமாக உள்ளது. இதை கருத்தில் கொண்டு வருங்காலத்தில் கல் குவாரிக்கு மாற்றாக கண்டுபிடித்து அதை செயல்படுத்த வேண்டும். இல்லையென்றால் சட்டத்திற்குட்பட்டு கல்குவாரி நடத்துங்கள். சட்டத்தை மீறி குவாரிக்கு அனுமதி வழங்கக் கூடாது என கூறினார்.

**3.மீரான்மைதீன், கள்ளிக்குடி, விவசாய பாதுகாப்பு சங்கம்**

குவாரி ஆரம்பிப்பதால் ஒரு சிலருக்கு வேலை கிடைக்கும் என்று கூறுகிறார்கள். ஆனால் 5 கிலோமீட்டரில் விவசாயம் நிச்சயம் பாதிக்கும். எந்த வேளாண்மை அதிகாரியை கூப்பிட்டு வந்து ஆராய்ச்சி பண்ணி கொள்ளுங்கள். தூசி மண்ணில் படியும் பொழுது சூரியஒளி வேருக்கு செல்லாது. தாவரங்கள் பச்சையத்தில் மேலே படியும் பொழுது உற்பத்தி பாதிக்கும். விவசாயம் என்பது நீண்டகால உற்பத்தி. ஒரு சில நபர்களுக்கான லாப நோக்கில் நீங்கள் இப்படி செய்கிறீர்கள். விவசாய நிலங்களை விட்டு வேறு இடத்தில் அவர்கள் குவாரி செய்யட்டும். விவசாய நிலம் முழுவதும் பாதிக்கும். இதனால் உற்பத்தி பாதிக்கும். இந்த மண் மாசுபடும், பயிர்களிலும் உற்பத்தி இருக்காது என கூறினார்.

**4.பொன்ராஜ், ராயபாளையம்**

நான் MSW படித்தவன், நாங்கள் இந்த குவாரியை வரவேற்கிறோம். ஆனால் எங்களுக்கு சாலை வசதி வேண்டும். இதற்கு முன்

சிறிய வாகனங்கள் சென்றது. இப்பொழுது பெரிய வாகனங்கள் தான் செல்கிறது. ரோட்டை அகலப்படுத்தி கொடுத்தால் நன்றாக இருக்கும் எங்கள் ஊர் பள்ளியில் 32 மாணவர்கள் தான் படிக்கிறார்கள். இவர்கள் நன்கு படிப்பதற்கு சிறந்த கல்வியை கொடுத்தால் நன்றாக இருக்கும். ஆங்கில வழி கல்வி மற்றும் பள்ளியை மேம்படுத்தினால் நன்றாக இருக்கும். அங்கே குடிநீர் வசதியை செய்து தர வேண்டும், முக்கியமாக சாலையை விரிவுபடுத்த வேண்டும் என கூறினார்.

5.மணி, செட்டிபிள்ளையார்நத்தம்

நான் 15 வருடமாக இதில்தான் வேலை பார்க்கிறேன். இது இல்லை என்றால் வேறு வழியில்லை. எங்கள் கிராமத்தில் மொத்தம் 15 வீடுகள் தான் உள்ளது. நாங்கள் அதை வைத்து தான் பிழைப்பு நடத்துகின்றோம். எங்களுக்கு காடு எதுவும் கிடையாது. நாங்கள் வேலை செய்தால் தான் சாப்பாடு. இதை நம்பி 100 பேர் வேலை பார்க்கிறோம். எங்களுக்கு இந்த வேலை வேண்டும். அனுமதி கிடைக்கனும். இதை வைத்து தான் நாங்கள் வாழ முடியும் என கூறினார்.

6அழகுராஜ், ஆலம்பட்டி

நான் 10 வருடமாக கல்குவாரியில் தான் வேலை பார்க்கிறேன். ஆரம்பத்தில் இருந்து 25 குடும்பம் இதை நம்பிதான் வாழ்கிறோம். எங்களுக்கு குவாரி வேணும் என கூறினார்.

7. குண்டுமணி, கீழக்கோட்டை

நான் ஒரு விவசாயி. முதலில் காட்டில் உள்ள வனவிலங்குகளை அதிகாரிகள் அகற்ற வன அதிகாரிகளிடம் கூறி தடுத்து நிறுத்துங்கள், விவசாயம் செய்தால் காட்டில் எதுவும் விளைவதில்லை. மான்

போன்ற காட்டு விலங்குகள் எங்களின் விவசாயத்தை அழித்து விடுகிறது. எங்களுக்கு இதனால் நஷ்டமாகிறது. இதனால்தான் நாங்கள் கல்குவாரி போன்ற வெளி வேலைக்கு போக வேண்டியுள்ளது. இங்குள்ள அனைவரும் கல்குவாரிக்கு தான் வேலைக்கு செல்கிறோம். விவசாயம் பாதித்து விட்டது. வனவிலங்குகளை தடுக்க இந்த அதிகாரிகள் உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், மதுரை</u>

திரு.ள.பி.கந்தவேலு சாதாரண கற்கள் மற்றும் கிராவல் குவாரி குறித்து தாங்கள் கூறியுள்ள அனைத்து கருத்துக்களும் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதுவரை பொறுமையாக இருந்து இந்த கூட்டத்தை சிறப்பாக நடத்தி கொடுத்த அனைவருக்கும் நன்றி என கூறி கூட்டத்தை நிறைவு செய்தார்.

25.8.2021

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
மதுரை

வருவாய் கோட்டாட்சியர்
திருமங்கலம்
மதுரை

இணைப்பு:

1. பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்ட விவரம் பத்திரிக்கை நகல் (தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளேடுகள்)

2. பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்தில் கலந்து கொண்டவர்களின் வருகை பதிவேடு நகல். (மொத்த பக்கம் 12 மற்றும் 91 நபர்கள்)

3, பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்தின் குறுந்தகடு நகல்.

4.திட்டத்தை பற்றி பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள்.